

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு சோளாம்பூண்டி மற்றும் சோழகனூர் ஊராட்சிகளில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கழக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி அவர்களின் தலைமையிலும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோழியனூர் ஒன்றியச் செயலாளர், க.மும்மூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மு.பிலால் உசேன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கி.பிரபாகரன், திண்டுக்கல் மாநகரச் செயலாளர் ச.ராஜப்பா, ஒன்றியச் செயலாளர்கள் த.நெடுஞ்செழியன், சு.மணி, மு.வெள்ளிமலை, ஆ.முருகேசன், என்.கனிக்குமார், மா.மணிகண்டன், பெ.கரிகாலப்பாண்டியன், பேரூர் செயலாளர் சின்னதுரை மற்றும் ஏராளமான நிர்வாகிகளும் கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான I.N.D.I.A கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், தும்பூர் தாங்கல், தும்பூர்,அசோகபுரி பூங்குனம், உலகலாம்பூண்டி, கொட்டியாம்பூண்டி ஆகிய கிராமத்து வாக்காளப் பெருமக்களிடம், உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பொன்முடி, கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கௌதம சிகாமணி, கழக சட்டத் திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா சந்திரசேகர் ஆகியோருடன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். இதில் பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெகதீசன், மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வ ராஜ், இரா.மணிமாறன், நல்லதம்பி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய விமானத்துறை அமைச்சரைச் சந்தித்து

# திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள்!

## எம்.பி.க்கள் கே.என்.அருண்நேரு - எம்.எம்.அப்துல்லா - ஜோதிமணி - முரசொலி - துரை வைகோ வழங்கினர்!

திருச்சி, ஜூலை 3 -

ஒன்றிய விமானத் துறை அமைச்சரை இந்தியக் கூட்டணி கட்சி எம்.பி..கள் சந்திப்பு குறித்து துரை வைகோ எம்.பி. கூறியதாவது:

ஒன்றிய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு அவர்களை 01.07.2024 அன்று பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அன்பு சகோதரர் கே.என்.அருண் நேரு, மாநிலங்களவை உறுப்பினர் சகோதரர் எம்.எம்.அப்துல்லா, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ. ஜோதிமணி, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் முரசொலி ஆகியோருடன் நானும் இணைந்து சென்று, நேரில் சந்தித்து திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம்.

அமைச்சர் அவர்களிடம் நாங்கள் அளித்துள்ள கோரிக்கை மனுவில்,

திருச்சி பன்னாட்டு விமான நிலைய புதிய கட்டிடத்தை நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார். இந்தப் புதிய கட்டிடம் இரண்டு வாரங்களுக்கு முன்பாக பயன்பாட்டிற்கு வந்தது. கூடுதல் பயணிகளின் வருகைக்காகவே இந்தப் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

கூடுதல் விமான சேவைகள் வழங்கப்பட்டால் மட்டுமே பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆனால், அதிக எண்ணிக்கையில் விமானங்களை இயக்குவதற்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் போதிய ஓடுதள வசதி இல்லை. ஆகவே, விமான ஓடுபாதை விரிவாக்கப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க தேவையான நிதியை வழங்குமாறு கோரிக்கை வைத்தோம்.

இரண்டாவதாக, இருதரப்பு விமான சேவை ஒப்பந்தத்தின் (BASA) படி, திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு விமான சேவை வழங்கிட அந்நாட்டு விமான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. திருச்சியில் இருந்து ஏர் இந்தியா விமானம் மட்டுமே துபாய் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு இயக்கப்படுகிறது. வாராந்திர சேவை அடிப்படையில் ஒரு வாரத்திற்கு 3760 இருக்கைகள் மட்டுமே இந்த விமானத்தில் நிரப்பப்படுகின்றன. இதனால் பயணக் கட்டணமும் பல மடங்கு அதிமாக உள்ளது. ஆகவே, வளைகுடா நாடுகளுக்குச் செல்வோர் பெங்களூர், சென்னை, கொச்சின் உள்ளிட்ட நகரங்களில் இருந்து விமான சேவையை பயன்படுத்துகின்றன. இதனால், திருச்சி விமான நிலை யத்திற்கு வர வேண்டிய வருவாய் பெங்களூர், கொச்சின் போன்ற விமான நிலையங்களுக்குச் சென்று விடுகின்றன.

எனவே, திருச்சியில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு கூடுதல் விமானங்களை இயக்க இருதரப்பு விமான சேவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனுமதி வழங்க வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் பயனடைவதோடு திருச்சி விமான நிலையத்திற்கு வருவாயும் அதிகரிக்கும் என, கோரிக்கை வைத்தோம்.

அதேப்போல, திருச்சியில் இருந்து டெல்லிக்கு நேரடி விமான சேவை இல்லை. ஆகவே, டெல்லியில் இருந்து திருச்சிக்கும், திருச்சியில் இருந்து கொச்சினுக்கும் விமானங்களை இயக்கிட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தோம்.

இந்த மூன்று கோரிக்கைகளும் நிறைவேற்ற ப்பட்டால், திருச்சி மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், கரூர், பெரம்பலூர், அரியலூர் உள்ளிட்ட அருகாமை மாவட்ட மக்களுக்கும் பெரும் பயன் விளை விப்பதாக இருக்கும்.

ஒன்றிய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு ராம்மோகன் நாயுடு அவர்களின் தந்தை காலஞ்சென்ற கிஞ்சராபு எர்ரான் நாயுடு அவர்கள் இயக்கத் தந்தை தலைவர் வைகோ அவர்களின் நெருங்கிய நண்பர் ஆவார். அமைச்சர் ராம்மோகன் நாயுடு அவர்கள், தலைவர் வைகோ அவர்களின் உடல் நலத்தை மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்ததோடு, தலைவர் அவர்கள் டெல்லிக்கு வரும்போது நேரில் வந்து சந்திக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக நாங்கள் தெரிவித்த கோரிக்கைகளை கண்டிப்பாக நிறைவேற்றித் தருவதாகவும் உறுதியளித்தார் என்று துரை வைகோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

### அத்திமாநகர் பகுதியில் மண் சரிவு:

# பந்தலூர் வட்டத்தில் நிவாரண முகாம்களில் நலத்திட்ட உதவிகள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, ஜூலை 3 -

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில், பெய்து வரும் தென்மேற்கு பருவமழையால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் நேரில் சந்தித்து, அவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

முதலாவதாக சுற்றுலாத் துறை வட்டத்தில் தென்மேற்கு அமைச்சர், பந்தலூர் பருவமழையையொட்டி, அத்திமாநகர் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும், பொன்னாணி அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிட நடுநிலைப்பள்ளி மற்றும் அம்பலமூலா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் கடந்த 28.06.2024 அன்று ஒரேநாளில் பெய்த 28 செ.மீ மழையால் தாழ்வான பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்குள் மழைநீர் புகுந்தது. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிவாரண முகாம்களான பொன்னாணி அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிட நடுநிலைப்பள்ளி மற்றும் அம்பலமூலா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டனர்.


